# அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 03.01.2022 அன்று நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமில் கல்லூரி முதல்வர் Dr.K.ரஜப் பாத்திமா வரவேற்புரையாற்றினார். கல்லூரித் தலைவர் Er.S.K.செய்யது அகமது தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். கல்லூரித் தாளாளர் ஹாஜி Er.S.K.குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரிப் பொருளாளர் ஹாஜி.O.K.ஜாபர் சாதிக் வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர் டாக்டர்.R.காயத்ரி அவர்கள் தலைமயிலான மருத்துவ குழுவினர் கல்லூரி மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்கு கண் பரிசோதனை செய்தனர். தூத்துக்குடி மோகன்ஸ் நீரிழிவு மையத்தின் மருத்துவ செயலாளர் திருமதி.பொன்சித்ரா மற்றும் ஆய்வக நுட்புநர் திரு.குமாரவேல் ஆகியோர் கல்லூரி பேராசிரியர்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறித்த பரிசோதனைகளை செய்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர்.த.ராமலெட்சுமி செய்து, நன்றியுரையாற்றினார். முகாமில் கலந்து கொண்ட மாணவிகளும், பேராசிரியர்களும் பயனடைந்தனர்.



